கூடிய முறையில் வந்தவை என்ற அளவிலே நல்ல காட்சியாக இருந்தது. அந்த உணர்ச்சியை எல்லோருடைய பேச்சிலிருந்தும் நான் கண்டேன். ஆகையால் இது துரிதமாக இந்தச் சபை முடிவதற்குள்ளாகவே சரியான ஏற்பாட்டை மேற்கொள்ளத் தயாராக இருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் அந்த அளவுக்கு தெளிவான வாக்குறுதியைக் கொடுத்து இருக்கிறார்கள் என்பதால் நான் இந்தத் தீர்மானத்தை வற்புறுத்த வில்லை. ஆறு மாதங்களுக்குள்ளாக சட்டமாக வேண்டும். அந்த ஏற்பாட்டை சட்டஅமைச்சர் அவர்கள் செய்வார்கள் என்ற நம்பிக்கையிருப்ப தால் இந்தத்தீர்மானத்தை வற்புறுத்தவில்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

Dr. H. V. HANDE : By way of clarification, Sir, how about having this meeting of leaders of parties in the next Assembly session ? Why not all leaders of parties meet before or during the next session and arrive at a solution ? Will the Hon. Minister give an assurance that he will arrange for such a meeting so that we may feel comfortable about it ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்த முறைகளைப் பற்றியெல்லாம் பல இடங்களிலே எப்படி கருத்துத் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது என்று பார்த்தேன். அதிலே மன்றத்தினுடைய தலைவர் அவர்களும் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களும் அங்கத்தினராக இருக்கிற காரணத்தாலே அவர்களும் பேசவேண்டுமென்று பார்த்தேன். ஆகவே எதிர்க் கட்சித் தலைவர்கள் எல்லாம் கூடிப்பேசி எந்தத் தேதியை சொல்கிறார்களோ அந்தத் தேதியிலே தலைவர் அவர்களுடைய அறையிலே கூடிப் பேசலாம். இப்பொழுதேகூட மற்றக் கட்சித் தலைவர்கள் எல்லாம் கூடிப் பேசி முடிவெடுத்தால் அரசாங்கத் தரப்பிலே ஆட்சேபணையில்லை

திரு. பி. ஜி. கருத்திருமன் : என்னுடைய ஆலோசனை என்னவென்றால் இதைப் பொதுப்படையாக ஏற்றுக்கொள்கிறோம். இப்பொழுது அதற்குரிய மசோதாவைத் தயார் செய்து அதற்குப் பிறகு எல்லாக் கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசினால் நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எந்தத் தேதியிலே தலைவர் அவர்கள் சொல்கிறார்களோ அந்தத் தேதியிலே பேசலாம்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : எந்த எந்த வகையிலே இருக்கலாம் என்பதற்கான குறிப்புக்களை யெல்லாம் எதிர்க் கட்சித் தலைவர்கள் தெரிவிப்பார்கள் என்றால் அந்தக் குறிப்புகளின் அடிப்படையிலே முடிவெடுத்து அதற்குப் பிறகு தயாரிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. நல்லசிவம் அவர்கள் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

2 அரசாங்கப் பணிமனைகளிலும், தொழில் நிறுவனங்களிலும தனியார் தொழிலகங்களிலும் அனுமின் இயந்திரத்தைப் புகுத்தல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து அரசாங்கப் பணிமனைகளிலும், தொழில் நிறுவனங்களிலும் தனியார் தொழிலகங்களிலும் அனுமின் இயந்திரத்தை (ஆட்டொமேஷன்) புகுத்துதல் பற்றி திரு. சி. கோவிந்தராசன் அவர்கள் ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதே பொருள் பற்றி திரு. வி. கே. கோதண்டராமன் அவர்களும் திரு. ஏ. பாலசுப்பிரமணியம் அவர்களும் ஒரு தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இந்த மூன்று தீர்மானங்களையும் ஒருசேர எடுத்துக்கொண்டு விவாதிக்கலாம்.

திரு. சி. கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, "அரசாங்கப் பணிமனைகளிலும், தொழில் நிறுவனங்களிலும், தனியார் தொழிலகங்களிலும் அனுமின் இயந்திரம் (ஆட்டொமேஷன்) புத்துவதானது நாட்டில் வளரும்